பக்கங்கள் 19 + 04

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

## மோ. சைக்கிள் விபத்தில் 19 வயது இளைஞர் பலி!

ஸ்கூட்டர் ரக மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியதில் 19 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மொரந்துடுவ – பண்டாரகம வீதியின் தெல்கட 02

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 30 ஞாயிற்றுக்கிழமை 14.07.2024 அதிர்வு 349




# தமிழரசு வழக்கில் விளக்கத்துக்கு முன் நீதிபதியுடன் அமர்ந்து கலந்துரையாடல்

## இணக்கத்துக்கு முன்னரான நடவடிக்கை

(கே.வசந்தன்)

**“சிவில் வழக்குகளில் இணக்கத் தீர்வுக்கான வாய்ப்பு இருக்குமாயின், அந்த வாய்ப்புக் குறித்து நீதிபதி, சம் பந்தப்பட்ட வழக்காளிகள்,அவர்களின்சட்டத்தரணிகள் ஒரு மேசையிலிருந்து கலந்துரையாடி பூர்வாங்கத் தீர்மானம் எடுக்கும் ‘விளக்கத்துக்கு முன்னரான கலந்துரையாடல்’ *(Pre - Trial Conference)* முறைமை சட்டத்தில் புதிதாகப் புகுத்தப்பட்டுள்ளது. அந்த முறைமை தமிழரசுக் கட்சி வழக்கில் முன்னெடுக்கப்படவிருக்கின்றது.”**

– இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இன்று தகவல் வெளியிட்டார்.

இத்தகைய முறைமைக்கு வழி செய்யும் சட்ட திருத்தம் குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையில் கடந்த ஆண்டு இறுதியில் கொண்டுவரப்பட்டு, பல வழக்குகளில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதுவே தமிழரசுக் கட்சி வழக்கிலும் பின்பற்றப்படவுள்ளது.

வவுனியாவில் இன்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பிரமுகர்களின் கூட்டத்தின் பின் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “தமிழரசுக் கட்சியின் 02

# பொருத்தமான வேட்பாளர் மொட்டுவில் இல்லை; ரணிலின் வெற்றிக்காக என்னை அர்ப்பணிப்பேன்

## அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு



“தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் அவருக்கு நன்றியுள்ள ஒரு நபராக அவரது வெற்றிக்காக என்னை அர்ப்பணிப்பேன்.”

– இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹா, உடுகம்பொல பிரதேசத்தில் நேற்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வற்புறுத்த 02

# ட்ரம்ப் மீதான கொலை முயற்சிக்கு ஜனாதிபதி ரணில் கடும் கண்டனம்

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீதான கொலை முயற்சியைக் கண்டிக்கின்றேன் என்று இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீதான படுகொலை முயற்சி குறித்து நான் அதிர்ச்சியடைகின்றேன். அவர் பாதுகாப்பாக இருப்பதையிட்டு நிம்மதியடைகின்றேன்.



இலங்கையர்களும் கடந்த காலங்களில் இவ்வாறான அரசியல் வன்முறைகளுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் சட்டங்களை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும்." – என்றார்.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தின்போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் டொனால்ட் ட்ரம்ப் காயமடைந்தார்.

அவர் சிகிச்சைகளின் பின்னர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழரசு...

அரசியல் குழுவும், கட்சி சம்பந்தமான வழக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினரும் ஒன்றாகக் கூடி அடுத்த தவணை 19 ஆம் திகதி வழக்கு வரவிருக்கின்ற காரணத்தால் அது குறித்து உரையாடினோம். நாங்கள் ஒவ்வொருவரும் எங்களெங்களது நிலைப்பாட்டுக்கு அமைய மறுமொழிகளை தாக்கல் செய்த பிறகு வழக்கை முடிவுறுத்துவதற்கான ஒரு யோசனை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

அந்த யோசனையின் விவரங்களை நாங்கள் மத்திய செயற்குழுவில் கூடி தீர்மானிப்போம். ஆனால், பொதுவாக வழக்கை எந்த அடிப்படையில் முடிவுறுத்தலாம் என்பது இணங்கப்பட்டிருக்கின்றது. முன்னேற்றகரமான செயற்பாடு கலந்துரையாடலில் இடம்பெற்றது.

எட்டு எதிராளிகளையும் 19 ஆம் திகதி வழக்கில் அழைப்பார்கள். கடைசியாக இடையீட்டு மனுவை முன்வைத்த ஜீவராஜா என்பவருடைய இடையீட்டு மனு தொடர்பான விடயமும் 19 ஆம் திகதி இருக்கின்றது. அவ்விடயத்தால் வழக்குத் தள்ளிப் போகக் கூடிய சில சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். ஆனால், அதைத் தவிர நாங்கள் அனைவரும் மறுமொழி அணைத்துள்ளோம், இப்பொழுது குடியியல் நடவடிக்கைகள் சட்டமூலத்தில் செய்யப்பட்ட திருத்தத்துக்கு அமைவாக வழக்கு விளக்கத்துக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னதாக சட்டத்தரணிகள் சகிதம் நீதிபதியோடு ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும் எனச் சொல்லப்பட்டுள்ளது. அந்த இடத்தில்தான் வழக்கை சுமுகமாகத் தீர்க்கக்கூடிய வழிகள் என்ன என்பதை நீதிபதியோடு இணைந்து பேசுவதற்கான ஒரு சந்தர்ப்பம் சட்டப்படியாக இப்பொழுது கொடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி மறுமொழி வழங்கிய பின்னர் ஒரு திகதியைத் தீர்மானித்து கலந்துரையாடலை மேற்கொண்டு வழக்கை என்ன மாதிரி முடிவுறுத்தலாம் என்ற தீர்மானத்துக்கு வரலாம். அதற்கு முன்னர் மத்திய செயற்குழு கூடி எடுக்கப்போகும் தீர்மானம் தொடர்பாகக் கலந்துரையாடி இணக்கப்பாட்டைத் தெரிவிக்கும்.

அத்தோடு, 'வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதன் காரணத்தால் தமிழரசுக் கட்சி செயற்பட முடியாமல் இருக்கின்றது, நீதிமன்றத்தில் முடங்கிக் கிடக்கின்றது, கட்சியினுடைய சின்னத்தைப் பாவிக்க முடியாமல் இருக்கின்றது, தேர்தல் வந்தால் என்ன செய்வார்கள்?' என்றெல்லாம் பலர் நீலிக்கண்ணீர் வடிக்கின்ற விடயம் நடந்துகொண்டிருக்கின்றது. இதனைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. இதனை ஊடகங்கள் மூலம் தெளிவுபடுத்துமாறும் என்னைப் பணித்தும் இருக்கின்றார்கள். கட்சி முடக்கப்படவில்லை. கட்சியினுடைய செயற்பாடுகள் எதுவும் முடங்கவில்லை. கட்சியின் சின்னம் முடக்கப்படவில்லை. கட்சி முழுமையாக செயற்பட்டுக் கொண்டே இருகின்றது. கட்சியின் சின்னத்தின் கீழ் எந்தத் தேர்தலையும் நாம் சந்திக்க முடியும். அதற்கு எந்தவிதமான இடர்பாடுகளும் கிடையா. ஆகவே, இதைத் தெரிந்து கொண்டே சிலர் வேண்டுமென்றே பிரசாரத்தை மேற்கொள்கின்றார்கள்.

அதனால்தான் இந்தத் தெளிவுபடுத்தலைச் செய்கின்றோம். வழக்கில் நிறுத்தப்பட்டிருப்பது கட்சியின் தெரிவுகள். கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற தெரிவுகள் நடைமுறைப்படுத்தக் கூடாது என்று ஒரு தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது. அதனுடைய பிரதிபலன் என்னவென்றால் அதற்கு முன்னிருந்த தலைவர், செயலாளர், நிர்வாகிகள் கட்சியினுடைய செயற்பாட்டை முன்னெடுக்க முடியும். அதற்கு எந்தவிதமான தடையும் கிடையாது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி உயிர்போடு இருப்பதுடன் ஓர் ஆக்கபூர்வமான பிரதிநிதிகளுடன் தொடர்ந்தும் பயணிக்கின்றது. எதிர்வரும் எந்தத் தேர்தலில் கட்சி போட்டியிடும். மக்களுக்கான தனது செயற்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும்.

நாடாளுமன்றக் குழுத் தலைவர் தொடர்பில் கலந்துரையாடப்படவில்லை. அது தொடர்பில் எமது கட்சியின் அரசியல் குழு இணைய வழி ஊடாக ஒரு தடவை கலந்துரையாடியது. மத்திய செயற்குழுவில் அது சம்பந்தமான தீர்மானம் எடுப்போம்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மனுவை சட்டத்தரணி ஒருவர் தாக்கல் செய்யதுள்ளார். அது மூன்று நீதியரசர்கள் முன்பாக விசாரணைக்கு வருகின்றது. ஏற்கனவே கடந்த திங்கட்கிழமையும் அப்படியான மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. 5 நீதியரசர்கள் குழு முன்னிலையில் நடந்தது. அந்த வழக்கில் நானும் ஆஜராகினேன். அது அடிப்படையில்லாத மனு எனத் தெரிவித்து அதனைத் தாக்கல் செய்தவருக்கு ஒரு இலட்சம் ரூபா வழக்குச் செலவும் செலுத்தும்படி உத்தரவிடப்பட்டது. வழக்கு நிலுவையில் உள்ளபோது அதனைப் பற்றிப் பேசக்கூடாது.

அரசு தேர்தலைபி பிற்போட முனைப்புக் காட்டுகின்றது என்பதை அரசமைப்பில் 83 (பி) என்கின்ற உறுப்புரையை மாற்றுவதற்கு அமைச்சரவை அனுமதி கொடுத்ததில் இருந்தே தெரிகின்றது. அதைப் பற்றி விளக்கமாகவும் விவரமாகவும் நாடாளுமன்றத்தில் பேசியுள்ளேன். தேவையில்லாத ஒரு திருத்தத்தை வேண்டுமென்றே கொண்டு வந்து, மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தித் தேர்தலைப் பிற்போடுவதற்கான ஒரு சதி செய்யப்படுகின்றது." – என்றார்.

### மோ. சைக்கிள்...

சந்தியில் இன்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலன்னாவை, சங்கீத் செவன அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்த உதவி சமையற்காரராகப் பணியாற்றிய மீபே ஆராச்சிகே தெவ்நிஜாடில்மெத் என்ற இளைஞரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் உள்ள தனியார் உணவு உற்பத்தி நிறுவனமொன்றில் பணிபுரியும் மேற்படி இளைஞர், பாணந்துறை பிரதேசத்தில் பிறந்தநாள் விழாவொன்றில் உதவி சமையலாளராகக் கடமையாற்றிவிட்டு வீட்டுக்குச் சென்றபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

### பொருத்தமான்...

வுள்ளேன்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை முன்வைப்பது குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி இன்னும் தீர்மானிக்கவில்லை.

ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்குப் பொருத்தமான நபர் எமது கட்சியில் இல்லை.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் அவருக்கு நன்றியுள்ள ஒரு நபராக அவரது வெற்றிக்காக என்னை அர்ப்பணிப்பேன்." – என்றார்.

# சஜித்துடன் இணையும் டலஸுக்கு முக்கிய பதவி

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணையவுள்ள சுதந்திர மக்கள் சபையின் தலைவர் டலஸ் அழகப்பெருமவுக்கு முக்கிய பதவி வழங்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது எனவும், ஐக்கிய மக்கள் சக்தியுடன் டலஸ் நேரடியாக இணையும் பட்சத்தில் அவருக்கு மாத்தறை மாவட்ட இணை அமைப்பாளர் பதவியும் வழங்கப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியில் உறுப்புரிமை பெறும் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தொகுதி மற்றும் மாவட்ட இணை அமைப்பாளர்கள் பதவி வழங்கப்படவுள்ளது.







# இளைஞர் விவசாய தொழில் முனைவோர் கிராமம் வவுனியா - பாவற்குளத்தில் இன்று அங்குரார்ப்பணம்

(கே.வசந்தன்)

வவுனியா – பாவற்குளம் பகுதியில் இளைஞர் விவசாய தொழில் முனைவோர் கிராமம் கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கே.காதர்மஸ்தானால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாவற்குளம் படிவம் இரண்டில் இன்று நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் தொழில் முனைவோருக்கான விவசாய உபகரணங்கள், கால்நடை வளர்ப்புக்கான பொருட்கள் மற்றும் கோழிக்குஞ்சுகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் மரக்கன்றுகளும் வழங்கி வைக் கப்பட்டன.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, செட்டிகுளம் பிரதேச செயலாளர் சுலோஜனா, கிராம சேவையாளர் உட்பட பொது மக்கள் பலரும் கலந்துகொண்டனர்.














Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
JULY
27
2024
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
FM
88.9 HD3 & 105.9
PRINTING PARTNER
INK DRIP
E PAPER PARTNER
முரசு
DESIGN BY
DESIGN WOLF.CA




# சாவகச்சேரி வைத்தியசாலையில் இயங்கிய புதிய மின் பிறப்பாக்கி!

(த.சுபேசன்)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் புதிய கட்டடத் தொகுதிக் கென நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் தற் காலிக ஏற்பாடாக வழங்கப்பட்ட மின் பிறப்பாக்கி இன்று (14) ஞாயிறுக் கிழமை காலை உத்தியோக பூர்வமாக இயக்கப்பட்டது.

சாவகச்சேரியில் இன்று ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணி தொடக் கம் மாலை 5 மணிவரை மின் வெட்டு அமுல்படுத்தப்பட்ட நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் அங்க ஜனால் தற்காலிக ஏற்பாடாக வழங் கப்பட்ட மின்பிறப்பாக்கி இயக்கப்பட் டது.

வைத்தியசாலையின் புதிய கட்டட பிரிவுக்கு வெளிநோயாளர் பிரிவு மற்றும் மகப்பேற்றுப் பிரிவு ஆகியவற்றை மாற்றிய போதிலும் மின்தடைப்படும் வேளையில் அதற்கான மாற்று ஏற் பாடுகள் எவையும் இல்லாத நிலை மையில் வைத்தியசாலையின் முன் னாள் வைத்திய அத்தியட்சகர் இ.அர்ச் சுனா அந்த விடயத்தை வெளிப் படுத்திய நிலையில் தற்காலிக மின் பிறப்பாக்கி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மட்டக்களப்பு எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் நிரப்பச் சென்றவர் உயிரிழப்பு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு எரிபொருள் நிலை யத்தில் எரிபொருள் நிரப்பச் சென் றவர் அந்த இடத்தில் வீழ்ந்து உயி ரிழந்துள்ளார்.

நாவற்குடாப் பகுதியைச் சேர்ந்த கந்தப்போடி தங்கவேல் (வயது - 48) என்னும் குடும்பஸ்தரே எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் உயிரிழந்தவர் ஆவார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

இன்று ஞாயிற்றுக்கிழமை (14) காலை தனது மகளை மேலதிக வகுப்புக் காகக் கொண்டு சென்று விட்டுள்ளார். பின்னர் எரிபொருள் நிரப்பச் சென்ற வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்துக்கு உடனடியாக வருகை தந்த மட்டக்களப்புத் தலை மையகப் பொலிஸார், திடீர் மரண விசாரணை அதிகாரியான அம்ஹர் சின்னலெவ்பை ஆகியோர் உயிரி ழந்தவரின் சடலத்தைப் பார்வையிட் டதுடன், மேலதிக விசாரணைக்காகச் சடலத்தைமட்டக்களப்புப்போதனா வைத் தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் நகர்வு இதுதான்!

'சோழியன் குடுமி சும்மா ஆடாது.' - அரசியல் நரித் தந்திரசாலியான ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நகர்வுகளும் அப்படித்தான்.

ஜனாதிபதித் தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை இன்னும் மூன்று நாள்களுக்குப் பின்னர் எந்தச் சமயத்திலும் தேர்தல் ஆணையம் விடுக்கலாம். அதற்கான அதிகாரம் வரும் 17ஆம் திகதியுடன் ஆணையத்துக்கு வந்துவிடும். அடுத்த மூன்று மாதங்களுக்குள் தேர்தல் நடந்து முடிந்தாக வேண்டும்.

ஜனாதிபதி பதவியில் தொடர்ந்து நீடிக்க விரும்பும் ரணில் விக்கிரமசிங்க அப்பதவியில் தான் நீடிப்பதற்காகத் தேர்தலில் போட்டியிடும் ஏற்பாடுகளை முழு வீச்சில் செய்து வருகின்றார். ஆனால் அது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடாமல் இழுத்தடிக்கின்றார்.

இந்த அம்சடக்குப் போக்கின் பின்னால் ரணிலின் ராஜதந்திரம் பொதிந்து கிடப்பது துலாம்பரமாகி வருகிறது.

அவரின் உத்தேச திட்டத்தின்படி -

அவர், தனிக் கட்சி சாராத பொது வேட்பாளராக இத்தேர்தலில் களமிறங்கவே தீவிரம் காட்டுகிறார். மொட்டு கட்சியில் தொடங்கி சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகள் யாவும் வெளியில் இருந்து தமக்கு ஆதரவு தரும் ஒரு நிலைப்பாட்டைப் பேணுவதையே அவர் விரும்புகிறார்.

இதுதான் அவரின் திட்டம். இந்த தரப்புகளில் ஒன்றின் பக்கத்துடன் கூட்டணி அல்லது கூட்டு அமைத்தால் மற்ற தரப்புப் பிய்த்துக் கொண்டு போய் விடும் என்ற அரசியல் யதார்த்தம் அவருக்கு நன்கு புலப்படுகின்றது.

அதனால் எல்லாத் தரப்புக்களின் ஆதரவையும், கூட்டு அல்லது கூட்டணி என்ற கட்டமைப்புகளுக்கு வெளியில் வைத்துக் கொண்டு, பொது வேட்பாளராகக் களம் இறங்குவது அவரது எத்தனம்.

ஏற்கனவே இது விடயத்தில் பிய்த்துக் கொண்டு போகும் சந்நதத்தில் நின்ற மொட்டுக்கட்சியின் தலைமையை, கடந்த புதன்கிழமை காலை விருந்து உபசாரக் கூட்டத்துடன் அவர் சமாளித்து விட்டார் என்று தெரிகின்றது. இந்த காலை உணவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் முன்னைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், மொட்டுக் கட்சியின் ஸ்தாபகர் நாமல் ராஜபக்ஷவும், ஜனாதிபதியின் ஆளணியின் சிரேஷ்ட பிரதானி சாகல இரட்நாயக்காவும் பங்கு கொண்டனர்.

அங்கு பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் முழுமையான தகவல் வெளியாகாவிட்டாலும் இரண்டு விடயங்களை ராஜபக்ஷக்களுக்கு உறுதிமொழியாகக் கொடுத்து, அவர்களைச் சமாளித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று கூறப்படுகிறது.

ஒன்று - தான் ஜனாதிபதியாக வெற்றி பெற்றால் நாடாளுமன்றம் உடனடியாக கலைக்கப்பட மாட்டாது.

இரண்டு - ஜனாதிபதி தேர்தல் முடிந்ததும் உடனடியாகவே மாகாண சபை தேர்தல் நடத்தப்படும்.

இதுவே அந்த வாக்குறுதிகள். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள், திருத்தங்கள் தொடர்பில் தாம் ஏற்கனவே தமிழர் தரப்புடன் விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளார் என்பதை ராஜபக்ஷக்களுக்கு ஜனாதிபதி தெரியப்படுத்தினார் என்றும் கூறப்படுகின்றது

அது ஒரு வகையில் உண்மைதான். நேற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தாமே தொலைபேசி அழைப்பு எடுத்து, இந்த விடயங்கள் குறித்துத் தமிழரசுக் கட்சி எம்.பியான சுமந்திரனுடன் விரிவாகப் பேசியிருக்கின்றார் என்பதை உறுதி செய்ய முடிந்துள்ளது.

மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை மீளக் கொண்டு வருவதற்கான தனி நபர் சட்டமூலப் பிரேரணை ஒன்றை சுமந்திரன் நாடாளுமன்றத்தில் முன்வைத்திருந்தார். அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அதனை உயர் நீதிமன்றம் விரிவாக ஆராய்ந்து தனது தீர்மானத்தை அறிவித்துவிட்டது. அந்த தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் சபாநாயகர் அறிவித்த நிலையில் சட்டமூலம் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

அதனை அடுத்த மாதம் மீண்டும் சபைக்கு எடுத்து, விவாதத்தை நடத்தி, அந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றச் செய்வதற்கான ஒழுங்கு முறைகள், அதில் குழு நிலையில் செய்யப்படக்கூடிய திருத்தங்கள் ஆகியவை பற்றி சுமந்திரனுடன் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரிவாகப் பேசியிருக்கின்றார் என அறிய முடிந்தது.

இவை தமது ஜனாதிபதித் தேர்தல் ஏற்பாடுகளுக்கான ரணில் விக்கிரமசிங்கவின் முன்ஆயத்த நகர்வுகள் என்பது தெளிவு.

# மன்னார் தமிழ்ச் சங்க நிகழ்வுகள்

















மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழில் விழாவும் 'உள்ளச் சிதறல்கள்' நூல் அறிமுக விழாவும் மாவட்டச் செயலகத்தின் முத்தரங்கம் மண்டபத்தில் நடைபெற்றன.







# ஆத்துச்சேனையில் பள்ளிவாசல் திறப்பும் கௌரவிப்பு நிகழ்வும்



**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

மட்டக்களப்பு மாவட்டம் - கிரான் பிரதேச செயலகப் பிரிவு, வாழைச்சேனை கமநல சேவைகள் நிலைய விவசாய எல்லைக்கு உட்பட்ட ஆத்துச்சேனையில் ஜாமிஉல் அக்பர் ஜும்ஆப் பள்ளிவாசல் திறப்பு விழா நிகழ்வு வெள்ளிக்கிழமை (12) இடம்பெற்றது.

பள்ளிவாசல் தலைவர் எம்.எம்.பாறூக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாகக் கிரான் கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எம்.ஏ.ரசீத் கலந்து கொண்டு பள்ளிவாசலை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

பள்ளிவாசல் திறப்பு விழாவின் பின்னர் இடம்பெற்ற முதலாவது குத்பா பிரசங்கத்தை ரிதிதென்ன அபூபக்கர் சித்தீக் ஜும்ஆப் பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி எம்.எல்.எம்.பைரூஸ் நிகழ்த்தியதோடு, ஜும்ஆத் தொழுகையை செம்மண்ணோடை பாரி ஜும்ஆப் பள்ளிவாசல் பேஷ் இமாம் எம்.எல்.எம்.முஹம்மட் நடத்தினார்.

காவத்தமுனைப் பகுதியைச் சேர்ந்த மரணமடைந்த மையன் போடியார் ஞாபகர்த்தமாக அவரது பிள்ளைகள் அன்பளிப்பு செய்த காணியில் இந்தப் பள்ளிவாசல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பள்ளிவாசல் கீழ்த்தளத்தை எம்.பி. இலவத்தம்பி ஹாஜியாரும், மேல் தளத்தை எம்.பி.புஹாரி ஹாஜியாருடன் இணைந்து நலன்விரும்பிகள் சிலரின் பங்களிப்புடன் கட்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின்போது, பள்ளிவாசல் உருவாக்கத்துக்குப் பாரிய பங்காற்றியோருக்கு பள்ளிவாசல் நிர்வாகத்தினர் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவித்தனர்.




# ரணிலுக்கு ஆதரவாகத் தேர்தல் பிரச்சாரம்




**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை வெற்றியடையச் செய்யும் தேர்தல் பிரச்சாரப் பணிகள் மத்தேகொடையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பிரதானி லசந்த குணவர்த்தனவின் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்ட “பச்சை இரத்தம்” என்னும் தொனிப்பொருளிலான பிரசார நடவடிக்கையில் வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகளுக்குச் சென்று துண்டுப் பிரசுரங்களை வழங்கினர்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

# Super Deal of this Week

## Till July 14th




LOWEST PRICE
12.99$
Only at GUNAAM'S SUPER MARKET




LOWEST PRICE
14.99$
Only at GUNAAM'S SUPER MARKET




LOWEST PRICE
10.00$
Only at GUNAAM'S SUPER MARKET

LOWEST PRICE
LB
3.99$
Only at GUNAAM'S SUPER MARKET




LOWEST PRICE
LB
4.49$
Only at GUNAAM'S SUPER MARKET




***Gunaam's Super Market*** இந்த வாரம் அள்ளித்தரும் மாபெரும் அதிரடி ***Super Deal.*** அனைத்து தாயகத்துப் பழவகைகள், மீன், இறைச்சி, காய்கறி வகைகளை ***fresh*** ஆகவும் மிக மிக குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| Roasted peanut | - $3.99 |
| MD Maldive fish | - $7.99 |
| MD Nelli cordial | - $5.99 |
| MD Sherbet cordial | -$5.99 |
| நாட்டுச்சக்கரை | - $3.99 |
| Kottu mee noodles | - $.89 |
| 400g uruthira dry chilli | - $4.99 |
| 200g Tamarind | - $1.00 |
| திரிபோஷா | - $5.99 |
| Refresh Jack fruit | - $1.99 |
| Uruthira நல்லெண்ணெய் | - $11.99 |
| Niru Tin fish 3 for | - $10.00 |
| Niru 8lb மைசூர் பருப்பு | - $7.99 |
| குடா மிளகாய் தூள் | - $12.99 |

| | |
|---|---|
| Maggi coconut powder | - $3.99 |
| 1kg Maggi coconut powder | - $14.99 |
| Niru Parboiled Rice | - $8.99 |
| Niru 8lb Rava | - $8.99 |
| Tiare chocolate swiss roll 4 for | - $10.00 |
| கயல் மீன் | - $3.99 lb |
| small சீலா | - 7.99 lb |
| Ceylon விளைமீன் | - $8.99 1b |
| சுராப்பாரை | - $7.99 lb |
| சூடை மீன் | - $3.99 lb |
| இறால் | - $4.49 lb |
| காட்டுப்பன்றp | - $5.99 lb |
| Ceylon கொடுவா | - $8.99 lb |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998

# அமெரிக்க வரலாற்றில்
# ஜனாதிபதி கொலை முயற்சிகளும் டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடும்!

**இந்தக் கட்டுரை முன்னாள் மற்றும் பதவியில் உள்ள அமெரிக்க ஜனாதிபதிகள் மீதான படுகொலை முயற்சிகளை பட்டியலிடுகிறது.**

- ஜங்கரன் விக்கினேஸ்வரா -

19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து டொனால்ன் ட்ரம்ப் வரை, அமெரிக்க ஜனாதிபதிகளின் மீதான படுகொலை முயற்சிகள் மற்றும் சதிகள் ஏராளமாக நடந்துள்ளன.

அமெரிக்காவில் அரசியல் படுகொலை, படுகொலை முயற்சிகள் இது முதற்தடவையல்ல. ஆபிரகாம் லிங்கன், ஜெ எப் கென்னடி, மார்டின் லூதர் கிங் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டு இருந்தனர்.

ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு!

அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் பென்சில்வேனியாவில் பட்லர் நகரில் குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக உரையாற்றிக் கொண்டிருந்த போது அவர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



துப்பாக்கிச் சூட்டில் டொனால்ட் ட்ரம்பின் காதுப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது. திறந்த மேடையில் உரையாற்றிக் கொண்டிருந்த போது அவர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலக்குத் தவறி அவரது காது பகுதியில் தாக்கியுள்ளது.

உடனடியாக சுதாரித்துக் கொண்ட ட்ரம்ப் கீழே குனிந்து தன்னை பாதுகாத்து கொண்டார். உடனடியாக விரைந்த பாதுகாப்பு தரப்பினர் மேலும் அசம்பாவிதம் ஏற்படாத வகையில் நிலமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர்.

### அடுத்த ஜனாதிபதி ட்ரம்ப்?

துப்பாக்கிச் சூட்டில் மயிரிழையில் தப்பினார் ட்ரம்ப் என்றும், அடுத்த ஜனாதிபதி ட்ரம்ப் உறுதியாகி விட்டது எனவும் சில ஊடகங்கள் சிலாகித்து எழுதத் தொடங்கிவிட்டன.

அமெரிக்க அரச கட்டமைப்புக்கு புறம்பாக செயற்படுவார் என நம்பபப்பட்ட ட்ரம்ப் நேட்டோவை பலவீனப்படுத்துவார் என்றும் ஊகிக்கப் பட்டது. டொனால்ட் ட்ரம் படுகொலை செய்யப்படலாம் என்ற அச்சம் ஏற்கனவே இருந்து வந்தது.

அத்துடன் ரஷ்யாவுக்கு ஆதரவாகச் செயற்படுவார் என்றும், உக்ரைன் யுத்தத்தை ரஷ்யாவுக்கு ஆதரவாக முடிவுக்கு கொண்டுவருவார் போன்ற காரணங்களால் இவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தப்படலாம் என்ற அச்சமும் நீண்டகாலமாக இருந்தது.

இத்தகைய நிலையில் அனுதாப வாக்குகளாலேயே டொனால்ட் டிரம்ப் வெல்லக் கூடிய சாத்தியங்கள் தற்போது எழுந்துள்ளன.

### அமெரிக்க வரலாற்றில் படுகொலை

ஜனவரி 30, 1835 இல், ஆண்ட்ரூ ஜாக்சன் ஒரு படுகொலை முயற்சியை அனுபவித்த முதல் ஜனாதி

தொடர்ச்சி▼





# அமெரிக்க வரலாற்றில்
# ஜனாதிபதி கொலை முயற்சிகளும் டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடும்!

தொடர்ச்சி ▲

பதி ஆவார். அப்போது ரிச்சர்ட் லாரன்ஸ் இரண்டு முறை கேபிட்டல் நகரில் அவரை சுட முயன்றார். லாரன்ஸின் இரண்டு கைத்துப்பாக்கிகளும் தவறாக சுடப்பட்டதால் அந்த முயற்சி தோல்வியடைந்தது.

வரலாற்றில் அமெரிக்காவின் நான்கு பதவியில் இருக்கும் ஜனாதிபதிகள் கொல்லப்பட்டனர். 1865 இல் ஆபிரகாம் லிங்கனை ஜான் வில்க்ஸ் பூத் என்பவர் சுட்டுக் கொன்றார்.

அதன் பின் இன்னோர் அதிபர் ஜேம்ஸ் ஏ. கார்ஃபீல்ட் 1881 இல் சார்லஸ் ஜே. கிடோவால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1901 இல் வில்லியம் மெக்கின்லி எனும் ஜனாதிபதியை லியோன் சோல்கோஸ்ஸால் என்பவர் சுட்டுக் கொன்றார்.

பலத்த சர்ச்சை உருவாக்கிய ஜான் எஃப். கென்னடி கொலை 1963இல் லீ ஹார்வி ஓஸ்வால்ட் என்பவரால் நடத்தப்பட்டது.




இற்றைவரை மூன்று ஜனாதிபதிகள் படுகொலை முயற்சியில் காயமடைந்துள்ளனர். முன்னாள் ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் 1912, ஜான் ஷ்ராங்க் என்பவரால் காயமடைந்தார்.

பனிப்போர் காலத்தில் பிரபல்யமான ரொனால்ட் ரீகன் 1981, ஜான் ஹிங்க்லி ஜூனியர் என்பவரால் சுடப்பட்டு காயமடைந்தார்.

நேற்று டொனால்ட் டிரம்ப் பென்சில்வேனியாவில் இடம்பெற்ற பேரணியில் உரையாற்றிக் கொண்டிருந்த போது, அவர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் காயங்களுடன் தப்பிக் கொண்டார்.

இந்த எல்லா நிகழ்வுகளிலும், தாக்குபவர்களின் ஆயுதம் ஒரு துப்பாக்கியாகவே இருந்துள்ளது.

ஆனால் இதுவரை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் மீது பல படுகொலை முயற்சிகள் பல நடந்துள்ளன. அவற்றுள் பல தோல்வியுற்றும் உள்ளன.

இத்தாக்குதல்கள் அனைத்தும் அமெரிக்க அரசின் தலைமையின் கொள்கையை மாற்றுவதற்கான விருப்பத்தால் தூண்டப்பட்டவை. எவ்வாறாயினும், அத்தகைய தாக்குதல்கள் அனைத்தும் அரசியல் காரணங்களைக் கொண்டிருக்கவில்லை.

பல தாக்குதலாளிகள் சந்தேகததுக்கு உரிய மன நோயாளி நிலைத் தன்மையைக் கொண்டிருந்தனர். மேலும் சிலர் சட்ட பூர்வமாக மன நோயாளிகளாக மதிப்பிடப்பட்டனர்.

ஆயினும் பெரும்பாலான படுகொலைத் திட்டம் தீட்டியவர்கள் கைது செய்யப்பட்டு மரண தண்டனை அல்லது சிறைச்சாலையில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டனர்.

### உளவுத்துறை கவலையீனம்

தேர்தல் பிரச்சாரத்தில் டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து அவர் மேடையில் இருந்து பாதுகாவலர்கள் புடைசூழ வெளியேறினார். இந்த தாக்குதலை அமெரிக்க நாட்டின் உளவுத்துறை உறுதி செய்துள்ளது.

குடியரசு கட்சியின் அதிபர் வேட்பாளரான முன்னாள் அதிபர் ட்ரம்ப், தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றினார். அப்போது இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இதில ட்ரம்பின் வலது காது பகுதியில் காயம் ஏற்பட்டது. காதில் இருந்து ரத்தம் சொட்டிய நிலையில் தனது கையை உயர்த்திக் காட்டினார். தொடர்ந்து பாதுகாவலர்கள் அவரை மேடையில் இருந்து பத்திரமாக அழைத்து சென்றனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர் மீது பொலிஸார் நடத்திய பதில் தாக்குதலில் அவர் உயிரிழந்தார்.

இதற்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன், முன்னாள் அதிபர் பராக் ஒபாமா ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# மட்டக்களப்பில் அஸ்வெஸ்ம நலன்புரி திட்ட பயனாளிகளை வலுவூட்டும் செயற்றிட்டம்!









**(பழுவூரான்)**


அஸ்வெஸ்ம நலன்புரித் திட்டத்தின் பயனாளிகளின் குடும்பங்களை வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் மாவட்ட திணைக்கள உத்தியோகஸ்தர்களின் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று சனிக்கிழமை (13) மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தித் திணைக்களப் பணிப்பாளர் எஸ். ராஜ்பாபுவின் ஏற்பாட்டில் மாவட்ட அரச அதிபர் ஜஸ்டினா முரளீதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெக்சுவல் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் சமூர்த்தி முகாமையாளர் நேர்மறை எண்ணத்தில் இருந்து மேம்பட்ட மனநிலைக்குப் பயனாளிகளை அழைத்துசெல்ல அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு வலுவூட்டலுக்கான திட்டங்கள் குறித்து அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் போன்ற கலந்துரையாடல் அஸ்வெஸ்ம நலன்புரி திட்டம் தொடர்பான செயல்திட்டம் காணொளி விவரணம் என்பன இடம்பெற்றன.

நிகழ்வில் சமுர்த்தித் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# முஸ்லிம்களது பிரச்சினைகளைத் தீர்க்கும் விதமாக ஜனாதிபதி வேட்பாளர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்து!

## நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்கிறார் ஹரீஸ் எம்.பி.

( நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம் சமூகத்தின் பலம் ஜனாதிபதியை தீர்மானிக்கும், நாடாளுமன்ற ஆட்சியை தீர்மானிக்கும் பலமாக உள்ளது. இந்த நிலையில் ஆறு பேர்ச் நிலத்தின் காணி உறுதியை பெற முடியாதவாறு தடுக்கும் சக்திகளுக்கு எதிராக போராட திராணியற்ற சமூகமாகவும், இயக்கமாகவும் நாங்கள் இருக்க முடியாது.

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு எங்களுடைய ஆதரவை வழங்குவதாக இருந்தால் எமது பிரதேசங்களின் பிரச்சினைகள், முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை பற்றி எழுத்து மூல ஒப்பந்தமொன்றை செய்யவேண்டும். அதில் நாவிதன்வெளி பிரதேச பிரச்சினைகள், காணி உரிமைகள், கல்முனை மாநகர மக்களின் பிரச்சினைகள், அம்பாறை மாவட்ட முஸ்லிங்களின் பிரச்சினைகள், கிழக்கு முஸ்லிங்களின் பிரச்சினைகள், தேசிய ரீதியாக முஸ்லிங்கள் எதிநோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக ஒப்பந்தம் பண்ணுவது காலத்தின் தேவையாக உள்ளது.

தமிழ் – முஸ்லிம் மக்கள் இணைந்து வாழும் பிரதேசங்களில் தொடர்ந்தும் முரண்பாடுகள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் இனத்துவ சமநிலை பேணப்பட வேண்டும். தமிழ் சகோதரர்கள் பிரதேச செயலாளர்களாக இருந்தால் முஸ்லிம் சகோதரர் ஒருவர் உதவி பிரதேச செயலாளராக இருக்க வேண்டும். அதுபோல முஸ்லிம் சகோதரர் ஒருவர் பிரதேச செயலாளராக இருந்தால் தமிழ் சகோதரர் ஒருவர் உதவி பிரதேச செயலாளராக இருக்க வேண்டும். இன்னும் கதைத்து கதைத்து காலத்தை கழிக்க முடியாது. உடனடியாக செயலில் இறங்க வேண்டிய நேரத்தில் இருக்கிறோம்.

மக்களினுடைய உரிமை சார்ந்த விஷயங்களில் நாங்கள் எப்போதும் கரிசனையுடனேயே தான் இருக்கிறோம்.

இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

டி– 100 திட்டத்தின் கீழ் நாவிதன்வெளி அபிவிருத்தி பெருவிழா நிகழ்வுகள் நாவிதன்வெளி அமீரலி விளையாட்டு மைதானத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அங்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர் தெரிவிக்கையில்,

எங்கள் மண்ணின் வளங்களை பயன்படுத்தி எத்தனை தொழிற்பேட்டைகளை உருவாக்க போகிறீர்கள் என்று ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கேட்போம். அவர்களை ஆதரிக்க முன்னர் அம்பாறை மாவட்ட இளைஞர், யுவதிகள் எத்தனை பேருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கப்போகிறீர்கள் என்று கேட்போம். எங்களின் மூதாதையர்கள், தாய் தந்தைகள் தந்த நிலங்களுக்கு உரிமை கேட்க பிரதேச செயலகங்களில் பிச்சை பாத்திரம் சுமக்கும் சமூகமாக நாம் இருக்க முடியாது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பது ஒருவர் அமைச்சராகவும், நால்வர் பிரதி அமைச்சராகவும் உருவாகும் இயக்கமல்ல. எங்களின் பலம் ஜனாதிபதியை தீர்மானிக்கும், நாடாளுமன்ற ஆட்சியைத் தீர்மானிக்கும் பலமாக இருக்கும் போது ஆறு பேர்ச் நிலத்தின் உறுதியை பெற முடியாதவாறு தடுக்கும் சக்திகளுக்கு எதிராகப் போராடத் திராணியற்ற சமூகமாகவும், இயக்கமாகவும் நாங்கள் இருக்க முடியாது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் போராளிகளோ, முஸ்லிம் சமூகத்தினரோ தளர்ந்து விடக்கூடாது. தொடர்ந்தும் முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் எமது பிரதேசங்களின் செயலாளர்கள், உதவி செயலாளர்களில் இனத்துவ சமநிலை பேணப்பட வேண்டும்.

தேர்தலொன்றை எதிர்நோக்கி இருக்கும் நாம் இருக்கும் மூன்று மாத கால அவகாசத்தில் மட்டுமல்லாது ஜனாதிபதி தேர்தலுக்கு பின்பு வருகின்ற காலத்திலும் தனிமனித கௌரவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

கடந்த நாடாளுமன்ற தேர்தல் நடந்த போதும் சரி, ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பு நடந்த போதும் சரி தமிழ் கட்சிகள் வட–கிழக்கு இணைப்பு, சமஸ்டி என்றெல்லாம் கேட்பார்கள். பிறகு பார்த்தால் இரண்டாவது விடயமாக கல்முனை மாநகர பிரச்சினைக்கு தீர்வு தரவேண்டும் என்றும் கல்முனையை நீதியற்ற, நியாயமற்ற விதத்தில் துண்டாடவும் கேட்பார்கள். மரணித்த சம்பந்தன் ஐயா கடந்த ஜனாதிபதி வாக்கெடுப்பின் போது இதுவிடயமாக டலஸ் – சஜித் ஆகியோருடன் ஒப்பந்தம் பண்ணினார். இவர்களின் ஒப்பந்தம் என்னவென்று காலையில் பார்த்தால் கல்முனையை பலியிட ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டிருந்தது.

இவற்றை எல்லாம் அவதானித்துக்கொண்டு இவ்வாறான சதிகளை முறியடிக்க பலவகைகளிலும் போராடிக் கொண்டு இருக்கிறோம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம், நம் சமூகத்துக்காகத் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றார்.

எனவே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அவர் ஊடாக நாங்கள் யாருடன் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் வகையில் பேசப்போகின்றோமோ அவர்களுடன் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை ஒப்பந்தமாக எழுதி கைச்சாத்திட போகிறோம். அது 50-100 பக்கங்கள் கொண்ட ஒப்பந்தங்களாக இருந்தாலும் சரி. அதனூடாக இலங்கை முஸ்லிங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணவேண்டும்.- என்றார்.



# கல்முனை - மருதமுனை கடற்கரை வீதி அபிவிருத்திப் பணிகள் ஆரம்ப நிகழ்வு

(மாளிகைக்காடு செய்தியாளர், எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனை தொடக்கம் மருதமுனை வரையிலான கடற்கரை வீதி காப்பெட் வீதியாக புனரமைப்பு செய்யும் ஆரம்ப வேலைத் திட்டம் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் அருகில் நேற்று (13) நடைபெற்றது.

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸின் டி- 100 வேலை திட்டத்தின் கீழ் இந்த வீதி 125 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 65 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தி செய்யப்பட்டவுள்ளது.

கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.ஏ.கலீல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீதி அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் இசட்.ஏ.எம் அஸ்மீர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் எம்.ஐ.எம் நியாஸ், கல்முனை மாநகர சபை பொறியியலாளர் ஏ.ஜே அப்துல் ஹலீம் ஜௌஸி, கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான ஏ.ஆர். அமீர், எம்.ஐ.எம் பிர்தௌஸ், ஏ.ஏ.பஷீர், எம்.எஸ்.எம் நவாஸ், காரைதீவு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களான எம்.என்.எம். ரணீஸ், எம்.எச்.எம்.இஸ்மாயில், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ பாவா, நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் மத்திய குழுவினர், வட்டார அமைப்பாளர்கள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், பாடசாலைகளின் அதிபர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# கரைவாகு ஆற்றில் நிறைந்துள்ள ஆற்றுவாழையால் பெரும் சிரமம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருதை ஊடறுத்துச் செல்லும் கரைவாகு ஆற்றில் நிறைந்துள்ள ஆற்றுவாழையால் மீனவர்களும் பிரதேசவாசிகளும் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

சாய்ந்தமருது கரைவாகு ஆற்றை ஆக்கிரமித்துள்ள ஆற்றுவாழையால் பலவிதமான பிரச்சினைகளை பிரதேச மக்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

ஆற்றுவாழை வளர்ந்து காணப்படுவதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. தொற்று நோய்கள் பெருகுவதற்கான சூழலும் உருவாகி வருகின்றது. இரவு வேளைகளில் பிரதேசமெங்கும் ஒருவகையான துர்நாற்றம் வீசுவதால் அருகிலுள்ள குடியிருப்பாளர்கள் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்கொண்டுள்ளனர்.

அத்துடன் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

ஆற்றுவாழைகளுக்கு இடையில் முதலைகள்மற்றும்பாம்புகளின்பெருக்கமும் அதிகரித்துள்ளது.

ஆற்றில் நீர் நிறையும் வேளைகளிலும் வெள்ள காலங்களிலும் அருகிலுள்ள குடியிருப்புகளுக்குள் இந்த உயிரினங்கள் பிரவேசிப்பதால் சிறுவர்கள், குழந்தைகள் மற்றும் முதியோர் பெரும் அச்சத்தை எதிர்கொண்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு பிரதேசவாசிகள் கேட்டுள்ளனர்.



# மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரியின் 149ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரியின் 149 ஆவது கல்லூரி ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும் வகையில் கல்லூரியின் பழைய மாணவர்கள், கல்லூரி அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பாடசாலைச் சமூகத்தினர் ஆகியோரின் பங்களிப்புடன் கல்லூரி அதிபர் சாந்தகுமார் தலைமையில் நிகழ்வுகள் நேற்று சனிக்கிழமை (13) இடம்பெற்றன.

கல்லூரியின் 149 ஆவது கல்லூரி ஆண்டு சிறப்பு நிகழ்வாக 149 ஆவது நினைவு கேக் வெட்டி தேசிய மற்றும் பாடசாலைக் கொடிகள் ஏற்றி, பாடசாலை கீதத்துடன் நிகழ்வு இடம்பெற்றது.

கல்லூரி மாணவர்களின் சாதனைகளை முன்னிலைப்படுத்தி ஆரம்பமான கல்லூரி மாணவர்கள், கல்லூரி பழைய மாணவர்கள், கல்லூரி சமூகத்தினர் இணைந்த நடை பவனி நகர் பிரதான வீதி ஊடாக மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானம்வரை இடம்பெற்றது.

நடை பவனியைத் தொடர்ந்து இந்து கல்லூரி மைதானத்தில் கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், கல்லூரி அபிவிருத்தி குழு உறுப்பினர்கிடையிலான சினேகபூர்வ கரப்பந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் போட்டிகள், வீதி நாடகம் போன்றன இடம்பெற்றன.

இதேவேளை, கல்லூரிப் பழைய மாணவிகளால் கல்லூரி அபிவிருத்திக்காக நன்கொடை நிதி உதவிகள் வழங்கப்பட்டன. 1980 கல்லூரி பழைய மாணவர்களால் அமரத்துவம் அடைந்த கல்லூரி முன்னாள் அதிபர்களான டி.எஸ். கே. வணசிங்க மற்றும் டி. கனகசுந்தரம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக கல்லூரி மாணவர்களுக்கான பாண்ட் வாத்தியக் கருவிகள் தொகுதி கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்லூரி முன்னாள் ஓய்வு நிலை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்லூரி பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.











# பொலிஸ் பாவனையில் இருந்த கலாசார மண்டபம் கல்முனை மாநகர சபையினரால் பொறுப்பேற்பு

## நிர்மாணப் பணி இழுபறிக்குத் தீர்வு!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

பொலிஸாரின் பாவனையில் இருந்து வந்த பெரிய நீலாவணை கலாசார மண்டப வளாகம் கல்முனை மாநகர சபையால் முழுமையாகப் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபைக்குச் சொந்தமான இந்த வளாகம் மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸின் வேண்டுகோளின் பேரில், பெரிய நீலாவணை பொலிஸ் நிலையத்தால் கையளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை - பெரிய நீலாவணை கலாசார மண்டப வளாகத்தில் இருந்து வெளியேறியுள்ள பொலிஸாரின் விடுதி வசதிக்காக கல்முனை மாநகர சபையால் மாற்று இடம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு பிற்பகுதியில் மாகாண சபைகள், உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சின் உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் பெரிய நீலாவணையில் கலாசார மண்டபம் ஒன்றை நிர்மாணிக்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, முதலாம் கட்டப் பணிகள் முடிவுற்று இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் பெரிய நீலாவணையில் புதிதாக அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார் இதனைத் தற்காலிக தங்குமிட விடுதியாக பயன்படுத்தி வந்தனர்.

தற்போது இந்தக் கலாசார மண்டபத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கிருந்து பொலிஸாரின் விடுதியை இடமாற்றுவதற்கான நடவடிக்கைகளை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் மேற்கொண்டிருந்தார்.

இதனால் கலாசார மண்டப நிர்மாணப் பணிகளை தொடர்ந்து முன்னெடுப்பதில் காணப்பட்ட தடைகளும் சிக்கல்களும் நீங்கியிருப்பதாகவும் இதன் மூலம் நீண்ட நாள் இழுபறிக்கு தீர்வு கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நடுத்தர தொழில் முயற்சியாளர்களது பிரச்சினை தொடர்பில் பயிற்சி பட்டறை





(ரஸீன் ரஸ்மின்)

காலநிலை மாற்றம் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு ஏற்படும் தாக்கங்கள் மற்றும் அவற்றைக் குறைப்பதற்கான உபாயங்கள் மற்றும் அது தொடர்பான நிதி வசதிகள் பற்றிய பயிற்சி பட்டறை ஒன்று நேற்று (13) கற்பிட்டி பிரதேச செயலக கேட்போர் கூடம் மற்றும் நாவற்காடு வரவேற்பு மண்டபம் என்பவற்றில் இரு அமர்வுகளாக இடம்பெற்றது.

கற்பிட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர பெண் தொழில் முயற்சியாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களான ரஞ்சன யு.கே. பியதாஷ, சாமினி கே. ஹேமச்சந்திரா, சுற்றாடல் அமைச்சின் காலநிலை மற்றும் தழுவல் தொடர்பான தேசிய வழிநடத்தல் குழுவின் தலைவர் கலாநிதி ரஞ்சித் புன்யவர்தன, இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சரத் பிரேம்லால், சுற்றுச் சூழல், சமூக மற்றும் ஆளுகை, நிலைபேறான நிதியத்தின் ஆலோசகர் இந்துசான் சாந்தகுமாரன், கற்பிட்டி பிரதேச செயலாளர் சமில ஜயசிங்க உட்பட தெரிவு செய்யப்பட்ட அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# இறக்கும் முதலைகளால் துர்நாற்றம்!





(பாறுக் ஷிஹான்)

மாவடிப்பள்ளி பாலத்துக்கு அருகில் முதலைகள் பல இறந்து கரையொதுங்கி வருகின்றன.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவடிப் பள்ளி பாலம் அருகில் அண்மைக் காலமாக முதலைகள் பல இறந்த நிலையில் காணப்படுகின்றன.

இதனால் இப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அந்தப் பகுதியால் பொதுமக்கள் சிரமத்துடன் பயணம் செய்வதை அவதானிக்க முடிகின்றது.

இந்தப் பாலத்தை அண்டிய பகுதிகளில் சுமார் 30 இற்கும் அதிகமான முதலைகள் காணப்பட்ட போதிலும் தற்போது 10 முதல் 15 வரையிலான முதலைகளே காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 7 அடி முதல் 8 மற்றும் 9 அடி முதலைகள் தற்போது இறந்த நிலையில் நீரில் மிதந்து காணப்படுகின்றன.




# சிதம்பரா கணிதப் போட்டி விருது இங்கிலாந்தில் பெற்ற அஸ்வின்!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் மாணவன் கஜச்செல்வன் அஸ்வின், நேற்று (13) இங்கிலாந்தில் சிதம்பரா கணிதப் போட்டி வெற்றியாளருக்கான விருது பெற்றார்.

தரம் 8 மாணவர்களுக்கான போட்டிப் பிரிவில் வெற்றி பெற்றமைக்காக இவ்விருது அஸ்வினுக்கு வழங்கப்பட்டது.

இலங்கையின் அனைத்து பாடசாலை மாணவர்கள் மத்தியில் 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற, சிதம்பரா கணித போட்டியில் தரம் 8 இல் கல்வி பயிலும் அஸ்வின் சிறப்பு வெற்றியை பெற்றிருந்தார்.

இலங்கையைச் சேர்ந்த அஸ்வின் உட்பட ஐந்து மாணவர்கள் இந்த விருது வழங்கும் விழாவில் பல்வேறு பிரிவுகளில் விருதுகளை பெற்றனர்.





# ஆம்ஸ்ட்ராங் கொலைக் குற்றத்தில் கைதான சந்தேகநபர் என்கவுன்ட்டரில் சுட்டுக்கொலை





பகுஜன் சமாஜ் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைதான திருவேங்கடம் என்பவர் என்கவுன்ட்டரில் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கடந்த 5 ஆம் திகதி, பெரம்பூர் வேணு கோபால் சுவாமி கோயில் தெருவில் உள்ள அவரது வீட்டின் முன் மர்ம கும்பலால் வெட்டிகொலை செய்யப்பட்டார். இந்த சம்பவம் சென்னை மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருந்தது. பல்வேறு தரப்பிலிருந்தும் கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு இருந்தன. சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்தது.

இந்த நிலையில் இக்கொலை தொடர்பாக ஏற்கெனவே கொலை செய்யப்பட்ட பிரபல ரவுடி ஆற்காடு சுரேஷின் தம்பி பொன்னை பாலு, குன்றத்தூர் திருவேங்கடம், சந்தோஷ், செல்வராஜ் திருமலை உள்பட 11 பேர் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டனர். அவர்கள் பூந்தமல்லி சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இந்த 11 பேரிடமும் பொலிஸார் தொடர்ந்து பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர். கொலையாளிகளில் ஒருவரான குன்றத்தூர் திருவேங்கடத்தை வழக்கு விசாரணை தொடர்பாக கொடுங்கையூர் காவல் ஆய்வாளர் சரவணன் தலைமையிலான பொலிஸார் புழல் நோக்கி அழைத்துச்சென்றனர். மாதவரம் ஆட்டுத்தொட்டி அருகே சென்றபோது பொலிஸாரின் பிடியிலிருந்து திருவேங்கடம் தப்பி ஓடிவிட்டார்.

இது தொடர்பாக பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு கூடுதல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்றது.

இந்த நிலையில் புழல் வெஜிடேரியன் நகரில் காலி மனையில் அமைக்கப்பட்டுள்ள தகர கொட்டாயில் திருவேங்கடம் பதுங்கி இருப்பதை பொலிஸார் கண்டுபிடித்தனர். ஆம்ஸ்ட்ராங்கை கொலை செய்ய கொலையாளிகள் அடிக்கடி கூடிசதித் திட்டம் தீட்டிய இடங்களில் இந்த இடமும் ஒன்று என கூறப்படுகிறது. பொலிஸார் திருவேங்கடத்தை சுற்றி வளைத்த போது, தான் பதுக்கி வைத்திருந்த நாட்டு துப்பாக்கியை எடுத்து பொலிஸாரை நோக்கி சுட்டார்.

இதையடுத்து தனிப்படை பொலிஸ் ஆய்வாளர் முகமது புகாரி திருவேங்கடத்தை துப்பாக்கியால் சுட்டார். இதில் வலது பக்க வயிறு மற்றும் இடது மார்பில் குண்டுகள் பாய்ந்து திருவேங்கடம் சுருண்டு விழுந்தார். அவரை மாதவரத்தில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு பொலிஸார் அழைத்துச் சென்றனர். அப்போது அவரை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே இறந்துவிட்டார் என தெரிவித்தனர்.

பொலிஸ் உயர் அதிகாரிகள் என்கவுன்ட்டர் நடந்த இடம் மற்றும் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள சடலத்தை பார்வையிட்டனர்.

என்கவுன்ட்டரில் கொல்லப்பட்ட இதே குன்றத்தூர் திருவேங்கடம், தாமரைப்பாக்கம் கூட்ரோட்டில் கடந்த 2015 ஆம் ஆண்டு பகுஜன் சமாஜ் கட்சி மாவட்ட செயலாளரும் ஆம்ஸ்ட்ராங்கின் நெருங்கிய நண்பருமான புளியந்தோப்பு தென்னரசு கொலை வழக்கு உட்பட 3 கொலை வழக்குகள் உட்பட மேலும் சில வழக்குகளில் தொடர்புடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

உணவு விநியோகஸ்தர் போல பெரம்பூர் பகுதியில் பத்து நாள்களாக சுற்றித்திரிந்து ஆம்ஸ்ட்ராங்கின் ஒவ்வொரு நடவடிக்கையையும் கண்காணித்து, கச்சிதமாக கொலை திட்டத்தைசெயல்படுத்தமுக்கியபங்குவகித்தவர் திருவேங்கடம் என பொலிஸார் தெரிவித்தனர்.

# கூட்டணி என்பது எனது கோட்பாட்டில் இல்லை

## சீமான் கூறுகின்றார்



“கூட்டணி என்பது தனது கோட்பாட்டில் இல்லை. திராவிடக் கட்சிகளுடன் தன்னால்ஒருபோதும்கூட்டணிஅமைக்க முடியாது.”

– இவ்வாறு என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

திராவிடக் கட்சிகளுடன் ஒருவேளை கூட்டணி அமைந்தால், அது மாற்றாக இல்லாமல், ஏமாற்றமாக இருக்கும் என்றும் சென்னையில் ஊடகங்களுக்குக் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாகரிக அரசியல் தெரியாத தி.மு.க, இழிவாகப் பேசுவதற்கு என்றே பேச்சாளர்களை வைத்திருந்ததாகவும், தற்போது நாம் தமிழர் கட்சியினர் சாதி அடிப்படையில் கருத்துக் கூறிவருகின்றனர் என குற்றம் சுமத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் சீமான் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், குடிப்பெருமை பேசுவதாக தன்னை விமர்சிக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன், தி.மு.கவிடம் இருந்து ஒரு பொது தொகுதியைக்கூட வாங்க முடியாத நிலையில் இருக்கின்றார்.

ஆனால்.. 16 பொதுத் தொகுதியில் தனித்துப்போட்டியிட்ட தன்னை சாதிப் பெருமை பேசுவதாகக் விமர்சிக்கின்றார் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மேலும் குறிப்பிட்டுள்ளார்




# டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிப் பிரயோகம்

அமெரிக்காவின் பென்ஸில் வேனியா மாநிலத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரமொன்றில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான டொனல்ட் ட்ரம்பின் கூட்டத்தில் உரையாற்றும் போது இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் உடனடியாக மேடைக்கு கீழாக பதுங்கியுள்ளார்.

பின்னர் மேடைக்கு கீழிருந்து அவர் எழுந்தபோது அவரது காதில் இரத்தம் வழிந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, டொனால்ட் ட்ரம்ப், அவரின் மெய்பாதுகாவளர்களினால் மேடையில் இருந்து பாதுகாப்பாக அழைத்து செல்லப்பட்டார்.

இதேவேளை துப்பாக்கித் தோட்டா ஒன்று தமது வலது காது மடலைத் துளைத்துச் சென்றதை தாம் உணர்ந்ததாகக் குடியரசுக் கட்சியின் வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப், எக்ஸ் பதிவொன்றில் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் குடியரசுக் கட்சியின் வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பின் உடல்நிலை சீராக உள்ளதாக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, துப்பாக்கி பிரயோகத்தினை மேற்கொண்டவர்களில் ஒருவர் அந்தநாட்டு பாதுகாப்பு படையினரின் துப்பாக்கி பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார். மற்றுமொருவர் காயமடைந்துள்ளார் என பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், டொனால்ட் ட்ரம்பின் மீது நடத்தப்பட்ட படுகொலை முயற்சி மற்றும் தாக்குதல் நடத்திய நபர் தொடர்பில் அமெரிக்காவின் எப்.பி.ஐ. அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தாக்குதல் நடத்திய நபர், பொதுக் கூட்டம் நடந்த இடத்தின் அருகில் இருந்த உயரமான பகுதியிலிருந்து பிரசார மேடையை நோக்கி பலமுறை சுட்டுள்ளார் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தத் தாக்குதலில் பார்வையாளர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

தாக்குதல் நடத்திய நபரை இரகசிய சேவை அதிகாரிகள் சம்பவ இடத்திலேயே சுட்டுக் கொன்றனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில்,இந்தசம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளை எப்.பி.ஐ மேற்கொள்ளும் எனவும் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நவம்பர் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடுபிடித்துள்ளன.

இதன் ஒரு கட்டமாகவே, பென்ஸில் வேனியாவின் பட்லர் நகரில் தேர்தல் பிரசாரத்தில் ட்ரம் பங்கேற்றிருந்தார்.

இந்த நிலையில், ட்ரம் மீதான தாக்குதலுக்கு குடியரசு கட்சியின் மூத்த உறுப்பினர்களும், ஜனநாயக கட்சியினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அமெரிக்காவில் இது போன்ற வன்முறைகளுக்கு இடமில்லை எனவும், இவ்வாறு சம்பவங்களுக்கு எதிராக அனைவரும் ஒரு தேசமாக ஒன்றுபட வேண்டுமென ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும், அமெரிக்க ஜனாதிபதியுமான ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மத்திய அரச அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# காசா யுத்தத்தின் எதிர்ப்புத் தாக்குதலே ட்ரம்ப் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது

## அவுஸ்திரேலியா கூறுகின்றது

காசா யுத்தம் தொடர்பிலான எதிர்ப்பு தாக்குதலே அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி மீது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய பிரதமர் அன்டனி அல்பெனிஸ் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி துப்பாக்கி பிரயோகத்திலிருந்து உயிர்தப்பியமை நிம்மதியளிப்பதாகவும் அவுஸ்திரேலிய பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“இது மன்னிக்க முடியாத தாக்குதல். ஜனநாயக செயற்பாடுகளில் வன்முறைக்கு இடமில்லை.

காசா யுத்தம் தொடர்பில் அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களிற்கு வெளியே ஆர்ப்பாட்டங்கள் அதிகரிப்பதையும் டிரம்ப் மீதான தாக்குதலையும் அமெரிக்கா மிக அவதானத்துடன் கையாள வேண்டும்.

இவ்வாறான சம்பவங்களை எந்த தயக்கமும் இன்றி எதிர்க்க வேண்டும்.



மேலும், நாங்கள் காராசாரமான விவாதத்தின் அளவை குறைக்கவேண்டும். சொல்லாட்சியை அதிகரிப்பதன் மூலம் எந்த பயனும்கிட்டப்போவதில்லை.” என அன்டனி அல்பெனிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

பக்கங்கள் 04

# கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 14/07/2024

## ஆற்றில் மீன்பிடிக்கச் சென்ற இளைஞன் சடலமாக மீட்பு!

கியூபெக், ஜூலை 14
மீன்பிடிக்கச் சென்ற போது காணாமல் போன பதின்ம வயது இளைஞரின் உடலை கியூபெக் மாகாணப் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர். C2



### கட்டுப்பாட்டு நெருக்குதல்களையும் மீறி

# கனடாவில் சர்வதேச மாணவர்களுக்கு கிடைக்கும் கல்வி அனுமதி அதிகரிப்பு

**ஒன்ராரியோ, ஜூலை 14**
**சர்வதேச மாணவர்கள் உட்பட தற்காலிக குடியிருப்பு அனுமதி பெற்று கனடாவில் வாழ்வோரின் எண்ணிக்கையைக் கனடா அரசு கட்டுப்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகளையும் மீறி, கனடாவில் சர்வதேச மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி அனுமதிகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது.**

கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோவின் அரசியல் வாழ்க்கைக்கு பிரச்சினையை ஏற்படுத்தும் அளவுக்கு கனடாவில் ஏற்பட்ட வீடுகள் தட்டுப்பாடு பிரச்சினை காரணமாக, சர்வதேச மாணவர்கள் உட்பட தற்காலிக குடியிருப்பு அனுமதி பெறுவோரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்க இருப்பதாக மத்திய அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தது.

ஆனால், கனடாவின் கட்டுப்பாடுகளையும் மீறி, 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையிலான கால கட்டத்தில் வழங்கப்பட்ட கல்வி அனுமதிகளின் எண்ணிக் கையை விட, 2024ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் வழங்கப் பட்ட கல்வி அனுமதிகளின் எண்ணிக்கை அதிகரித் துள்ளதாக கனேடிய புலம் பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் கனடா வழங்கிய கல்வி அனுமதிகளின் எண்ணிக்கை 165,805, 2024ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் கனடா வழங்கிய கல்வி அனுமதிகளின் எண்ணிக்கையோ 187,510 என்பது குறிப்பிடத்தக்கது.

# கிரிப்டோ முதலீட்டு மோசடியில் பெருந்தொகை இழந்த மூவர்!

### செயற்கை நுண்ணறிவு சதியில் வீழ்ந்தனர்



ஒன்ராரியோ, ஜூலை 14
ஒன்ராரியோ மாகாணத்தை சேர்ந்த மூன்று பேர் கிரிப்டோ முதலீட்டு மோசடியில் சிக்கி பெருந்தொகைப் பணத்தை இழந்துள்ளனர்.

இந்த மூவரும் சுமார் 337,000 டொலர்களை இழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் பிரம்டனை சேர்ந்த ஒருவர் சுமார் 226,000 டொலர்களை இழந்துள்ளார்.

ஆரம்பத்தில் 1,200 டொலர்களை முதலீடு செய்தார் எனவும் இரண்டு வாரங்களில் 3,000 டொலர்கள் வரையில் அதிலிருந்து கிடைக்கப்பெற்றதாகவும் முகமது ஹக் என்பவர் தெரிவிக்கின்றார். C2




# மது விற்பனை நிறுவனப் பணியாளர்களின் தொழிற்சங்க போராட்டம் தொடருகின்றது

ஒன்ராரியோ, ஜூலை 14

கனடாவில் முன்னணி மதுபான விற்பனை நிறுவனங்களில் ஒன்றான எல்.சீ.பீ.ஓ. நிறுவனப் பணியாளர்கள் ஒன்ராரியோவில் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டு வாரங்களாக முன்னெடுக் கப்பட்டு வரும் போராட்டத்தினால் மாகாண மதுபான விற்பனைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

மதுபான விற்பனை நிலையங் களில் முன்னெடுக்கப்பட்டு வரும் பணிப்புறக்கணிப்பு போராட்டம் மாகாணத்தின் பல்வேறு நிகழ்வுகளை பாதிக்கும் என சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

குறிப்பாக திருமண நிகழ்வுகள், கோடைகால விருந்துபசாரங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளுக்கு இந்த போராட்டம் தடையாக அமைந் துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

எவ்வாறெனினும், இணையத்தில் சிறிய அளவில் மதுபானம் கொள் வனவு செய்ய முடியும் எனவும் தெரி விக்கப்படுகிறது.



## ஆற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியூபெக், செயின்ட் இக்னஸ் த லொயோலா பகுதியில் செயின்ட் லோரன்ஸ் ஆற்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்த இளைஞர் காணா மல் போனார் எனப் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

குறித்த சிறுவனின் உடலை மொன்ரி யலுக்கு வடகிழக்கே 70 மீற்றர்கள் தொலைவில் பொலிஸார் கண்டெடுத் துள்ளனர்.

ஜூலை 12ஆம் திகதி ஆற்றில் மீன் பிடிக்கச் சென்ற போதே இந்த இளைஞர் காணாமல் போயுள்ளார்.

அவரைகண்டுபிடிப்பதற்காகசுழியோ டிகள், தீயணைப்பு படைவீரர்கள், பொலிஸாருடன் ஹெலிக்கொப்டரும் பயன்படுத்தப்பட்டதாக கியூபெக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கிரிப்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் பின்னர் தாம் பெருந்தொகை பணத்தை இழக்க நேரிட்டதாக அவர் குறிப்பிடுகின்றார்.

கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ஷரூடோ இந்த முதலீட்டு திட்டம் தொடர்பில் விளக்கம் அளித்த காணொலி ஒன்றை சமூக ஊடகத்தில் பார்த்ததாக அவர் குறிப்பிடுகின்றார்.

எவ்வாறெனினும் இந்த காணொலி யானது டீப் ஃபேக் என்னும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்டது எனத் தெரிவிக் கப்படுகிறது.

பிரதமர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் முதலீடு செய்துள்ள காரணத்தினால் தாமும் இந்த திட்டத்தில் முதலீடு செய்தார் எம அந்த நபர் குறிப்பிடு கின்றார்.

எனினும், அவர் இந்தக் கிரிப்டோ முதலீட்டு திட்டத்தில் பெருந்தொகை பணத்தை இழக்க நேரிட்டுள்ளது.

மிஸ்ஸஸாகாவைச் சேர்ந்த டெரல் புட்மிக் என்ற நபர் தான் இந்த மோசடி யில் சிக்கி 130,000 டாலர்களை இழந்தார் எனத் தெரிவிக்கின்றார்.

உலகின் பல்வேறு பிரபலங்களின் உருவத் தோற்றத்திற்கு நிகரான செயற்கை நுண்ணறிவு காணொலிக ளின் ஊடாக இந்த மோசடி முன்னெடுக் கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.




# லொத்தரில் பெருந்தொகை வென்ற தம்பதியினர் ஓய்வு பெற்றுக் கொள்கொன்றனர் என அறிவிப்பு

ஒன்ராரியோ, ஜூலை 14 - ஒன்ராரியோவின் மில்டன் நகரில் லொத்தர் சீட்டிழுப்பில் பரிசு வென்ற தம்பதியினர் ஓய்வு பெற்றுக் கொள் கொன்றனர் என அறிவித்துள்ளனர்.

லொட்டோ மெக்ஸ் லொத்தர் சீட்டிழுப்பில் இந்தச் தம்பதியினர் 55 மில்லியன் டொலர் பணப்பரிசு வென்றுள்ளனர்.

லவுரான் சாஹில் மற்றும் டோல்ட் ஹறாவாக் ஆகிய இருவருமே இவ் வாறு பாரிய தொகை பணப் பரிசை வென்றுள்ளனர்.

கடந்த 25 ஆண்டுகளாக இருவரும் லொத்தர் சீட்ழுப்பில் பங்கேற்று வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

பணப்பரிசு வென்றெடுக்கப்பட்டதை தொடர்ந்து இருவரும் தங்களது ஓய்வை அதிகாரபூர்வமாக அறிவித் துள்ளனர்.

பாரியத்தொகை பண பரிசு வென் றெடுக்கப்பட்டது ர்ன அறிந்து கொண்டதும் தாம் அதிர்ச்சி அடைந் தனர் எனவும், நா வறண்டு போன தாகவும் பேச முடியாத நிலை காணப் பட்டதாகவும் அவர்கள் தெரிவிக் கின்றனர்.




# ஒன்ராரியோவில் கோடைகாலத்தின் தெளிவான தொடக்கம் விரைவில்!

ஒன்ராரியோ, ஜூலை 14

ஒன்ராரியோவில் கோடைகாலத் தின் சுத்தமான மற்றும் தெளிவான தொடக்கம் விரைவில் ஒரு திருப் பத்தை எடுக்கும் என எதிர்வுகூறப் பட்டுள்ளது.

மேற்கு கனடா மற்றும் அமெரிக் காவின் சில பகுதிகளில் நிறுத்தப்பட் டிருக்கும் தாழமுக்கம் மற்றும் தொடர்ச்சியான வெப்ப குவிமாடம், அப்பகுதியில் உள்ள வெப்பம் மற்றும் வறண்ட நிலை காரணமாக பிராந்தி யத்தில் சில குறிப்பிடத்தக்க காட்டுத் தீக்களைத் தூண்டியுள்ளது.

சனிக்கிழமை காலை நிலைவரப் படி, பிரிட்டிஷ் கொலம்பியா, அல் பர்ட்டா மற்றும் சசகெச்சுவானில் மட்டும் 387 இடங்களில் காட்டுத் தீ எரிகிறது.

மேற்கில் வலுவிழந்து வரும் மேடு மற்றும் ஹட்சன் விரிகுடாவில் தொடர்ந்து தாழமுக்கம் நிலவுவதால், கனடா முழுவதும் மற்றும் தெற்கு ஒன்ராரியோவிற்கு வார இறுதியிலும் அடுத்த வார தொடக்கத்திலும் புகைமூட்டம் காணப்படும் வாய்ப்புகள் உள்ளன.



# வான்கூவர் பல்கலையின் போராட்டக்காரர்களுக்கு அத்துமீறல் அறிவித்தல்!

## நாளைக்கு முன்னர் வெளியேற உத்தரவு

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூலை 14

பலஸ்தீனிய ஆதரவு போராட்டக்காரர்களுக்கு வான்கூவர் பல்கலைக்கழகம் அத்துமீறல் அறிவித்தல் அனுப்பியுள்ளது.

நாளை திங்கட்கிழமைக்குள் பிரிட்டிஷ் கொலம்பியா நனைமோ வளாகத்தில் உள்ள போராட்ட முகாம்களை அகற்றுமாறு அந்த அறிவித்தலில் கூறப்பட்டுள்ளது.

ஜூலை 11ஆம் திகதி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டதாகவும், திங்கள்கிழமை காலை 8 மணிக்குள் போராட்டக்காரர்கள் செல்லவில்லை என்றால், 'அவர்களை அகற்ற தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் எடுப்போம்' என்றும் பல்கலைக்கழகம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கு பதிலளிக்கும் வகையில் போராட்டக்காரர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், சட்டரீதியான சவாலுக்கு பணத்தை வீணாக்க வேண்டாம் என்றும் அதற்கு பதிலாக பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறும் பல்கலைக்கழகத்தை வலியுறுத்தியுள்ளனர்.

# கனடாவில் நூறு வயது முதியவர் 'ஸ்கை டைவிங்' செய்து சாகசம்

ஒன்ராரியோ, ஜூலை 14

கனடாவில் நூறு வயதான முதியவர் ஒருவர் 'ஸ்கை டைவிங்' சாகசம் செய்து அசத்தியுள்ளார்.

நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் திட்டத்திற்கு நிதி திரட்டும் நோக்கில் இந்த சாகச நிகழ்வில் முதியவர் பங்கேற்றுள்ளார்.

வானிலிருந்து குதித்து குறித்த முதியவர் சாகசம் செய்துள்ளார்.

பரசூட்டின் உதவியுடன் உயரப் பறக்கும் விமானத்திலிருந்து குதித்து குறிப்பிட்ட அளவு தூரம் ஸஸ்கை டைவிங் செய்துள்ளார்.

தாம் இரண்டாம் உலகப் போரின் போது இந்த பயிற்சிகளை பெற்றுக் கொண்டார் என நூறு வயதான எட் மார்ஷல் தெரிவிக்கின்றார்.

ஒன்றாரியோ மாகாணத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மார்ஷலின் நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் எனப் பலரும் பங்கேற்று அவரை உற்சாகப்படுத்தியிருந்தனர்.

சுமார் 11,000 அடி உயரத்திலிருந்து குதித்து முதியவர் குதித்து சாகசம் செய்துள்ளார்.



கனடிய இராணுவப் படையின் அடம் வின்னிகிக் என்பவருடன் இணைந்து இந்த முதியவர் வானில் இருந்து குதித்துள்ளார்.

ஒரு இலட்சம் டொலர்களை திரட்டும் நோக்கில் இந்த சாகசம் செய்யப்பட்டுள்ளது.